டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 21.04.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 251 - Madurai | Online Edition

# மேற்கு ஆசியாவில் நிலவும் சூழல் மற்றும் அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் : எல்பிஜி சிலிண்டர் விநியோகம் சீராக உள்ளது

புது தில்லி, ஏப்.20

மேற்கு ஆசியாவில் பதற்றம் நிலவும் சூழலில் முக்கியத் துறைகள் முழுவதும் தயார்நிலையையும், தடையற்ற செயல் பாட்டையும் உறுதி செய்வதற்காக மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது.

நாடு முழுவதும் பெட்ரோலியப் பொருட்கள், எல்பிஜி தடை இன்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பொதுமக்கள் பெட்ரோல் மற்றும் டீசலை பீதியுடன் வாங்கு வதையும், எல்பிஜியைத் தேவையில்லாமல் முன்பதிவு செய் வதையும் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மக்கள் வதந்திகளை நம்பாமல், சரியான தகவல்களுக்கு அதிகாரப் பூர்வமான தகவல்களை மட்டுமே சார்ந்திருக்குமாறு அறிவுறுத் தப்படுகிறார்கள்.

எல்பிஜி சிலிண்டர்களை முன்பதிவு செய்வதற்கு, பொதுமக்கள் டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்துமாறும், அவசியமின்றி எல்பிஜி விநியோகஸ்தர்களை நேரில் சந்திப்பதைத் தவிர்க்கு மாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 18.04.26ம் தேதி, 9192 மெட்ரிக் டன் வர்த்தக எல்பிஜி (சுமார் 4.83 லட்சம் 19 கிலோ எல்பிஜி சிலிண்டர்களுக்குச் சமம்) விற்பனை செய்யப்பட்டது.

ஆட்டோ எல்பிஜி விற்பனையானது தனியார் நிறுவனங்களிட மிருந்து பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங் களுக்கு மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதற்காக, பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களின் ஆட்டோ எல்பிஜி விற்பனை 72% அதிகரிக்கப்பட்டுள்ளது. கர்நாடகா, தமிழ்நாடு, தெலங்கானா, ராஜஸ்தான், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் உயர்வு ஏற்பட்டுள்ளது.

உர ஆலைகளுக்கான ஒட்டுமொத்த எரிவாயு ஒதுக்கீடு, அவற்றின் ஆறு மாத சராசரி நுகர்வில் ஏறத்தாழ 95 சதவீதத்தை எட்டும் வகையில், 09.04.2026 முதல் மேலும் 5% அதிகரிக்கப்பட்டுள்ளது.

வணிக ரீதியான எல்பிஜி கிடைப்பது குறித்த கவலைகளைத் தீர்க்கும் வகையில், ஹோட்டல்கள், உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற வணிக நிறுவனங்களுக்கு பிஎன்ஜி இணைப்புகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு நகர எரிவாயு விநியோக (சிஜிடி) அமைப்புகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

ஐஜிஎல், எம்ஜிஎல், கெயில் கேஸ், பிபிசிஎல் உள்ளிட்ட சிஜிடி நிறுவனங்கள், வீட்டு உபயோக, வணிக பிஎன்ஜி இணைப்பு களுக்கு ஊக்கத்தொகைகளை வழங்குகின்றன.

சிஜிடி கட்டமைப்புகளின் விரிவாக்கத்திற்குத் தேவையான ஒப்புதல்களை விரைவுபடுத்துமாறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மத்திய அமைச்சகங்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளன.

அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெய் கையிருப்புடன் உயர் திறனில் இயங்கி வருகின்றன. அதேவேளையில் போதுமான பெட்ரோல், டீசல் கையிருப்பும் பராமரிக்கப்பட்டு வருகிறது. வீட்டு உபயோக நுகர்வுக்கு ஆதரவளிக்கும் வகையில், சுத்திகரிப்பு நிலையங்களில் வீட்டு உபயோக எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் எரிபொருள் சில்லறை விற்பனை நிலை யங்கள் வழக்கம் போல் இயங்கி வருகின்றன.

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு வழக்கமான ஒதுக் கீட்டிற்கு கூடுதலாக 48,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# டெல்டா, தென் கடலோர மாவட்டங்களில் வரும் 26ம் தேதி வரை மழை வாய்ப்பு!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!!

சென்னை, ஏப்.20

தமிழகத்தில் டெல்டா மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஏப்.26-ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தெலங்கானா முதல் குமரிக்கடல் வரை ராயலசீமா மற்றும் உள் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகளில் ஒரு சில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) இன்று (ஏப்.21) லேசான மழையும், 22 முதல் 26-ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

உள் தமிழக மாவட்டங்களில் 24-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகமாக இருக்கக்கூடும்.

கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

*நேற்றைய தொடர்ச்சி...*

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?



**செய்முறை 4 : சியா புட்டிங்**

தாவரப் புரதத்திற்கு, சியா விதைகள் சிறந்த ஆதாரங்களில் ஒன்றாகும். அவற்றில் ஏராள மான நார்ச்சத்தும், ஆன்டி ஆக்ஸிடன்ட்களும் நிறைந்து உள்ளன. ஒரு செய்முறையாக, இது சிக்கலானதல்ல; மிகக் குறைந்த நேரத்தில் செய்து முடிக்கக்கூடிய, எளிதான மற்றும் மிகவும் நெகிழ்வான ஒரு செய்முறையாகும். சத்தான பழங்கள், கொட்டைகள் மற்றும் பெர்ரி போன்ற சிறந்த பொருட்களைச் சேர்க்கும்போது,

வியக்கத்தக்க ஆரோக்கிய நன்மைகளைக் கொண்ட இந்த சூப்பர்–ஃபுட்டை குழந்தைகள் செய்து மகிழலாம்.

**தேவையான பொருட்கள்**

- ஊறவைத்த சியா விதைகள் – ½ கப்
- உங்களுக்கு விருப்பமான பால் (பால் சார்ந்த, பாதாம், சோயா, முந்திரி மற்றும் தேங்காய்) — 2 கப்
- உங்களுக்கு விருப்பமான இனிப்பூட்டி (மேப்பிள் சிரப்) – 4 மேசைக்கரண்டி
- உங்களுக்கு விருப்பமான சேர்க்கைகள் (நறுக்கிய பீச்

பழங்கள் / வாழைப்பழம் / துருவிய ஆப்பிள் / மாம்பழத் துண்டுகள் / கிவி துண்டுகள் / தேங்காய்த் துருவல் / கிரானோலா/ கொட்டைகள் / பெர்ரி பழங்கள் / வேர்க்கடலை வெண்ணெய் / பாதாம் வெண்ணெய் / பேரீச்சம்பழம் / சாக்லேட் சிப்ஸ்)

● உங்களுக்கு விருப்பமான சுவைகள் (கோகோ தூள்/ இலவங்கப்பட்டை/ வெண்ணிலா சாறு)

● ஊறவைத்த பாரம்பரிய ஓட்ஸ்

**எப்படித் தயாரிப்பது**

படி 1 : ஒரு கலக்கும் கிண்ணத்தில், ஊறவைத்த சியா விதைகள், பால், இனிப்பூட்டி, பாரம்பரிய ஓட்ஸ் மற்றும் உங்களுக்கு விருப்பமான சுவையூட்டியைச் சேர்த்துக் கலக்கவும்.

படி 2 : இரவு முழுவதும் அல்லது 3 மணி நேரம் குளிரூட்டவும்.

படி 3 : பரிமாறுவதற்கு முன், உங்களுக்கு விருப்பமான கூடுதல் பொருட்களைச் சேர்க்கவும்.

படி 4 : உங்கள் இனிப்புப் பலகாரம் சுவைத்து மகிழத் தயாராகிவிட்டது!

**செய்முறை 5 : டார்ட்டில்லா காய்கறி சுருள்கள்**

குழந்தைகளுக்கான இந்த ராப் ரெசிபிகள் சத்தானவை, உண்பதற்கு இன்பமானவை, மேலும் பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்ட காய்கறிகளுடன் கலந்துள்ளன. குழந்தைகள் ஆரோக்கியமாகச் சாப்பிடக் கற்றுக்கொள்வதற்கு, இவற்றைச் செய்வது உற்சாகமாகவும் சுவையாகவும் இருக்கும்.

**தேவையான பொருட்கள்**

● கிரீம் சீஸ் – 8 அவுன்ஸ்

● மயோனைஸ் – 1 கப்

● உங்கள் விருப்பத்திற்கேற்ப தாளிப்பு/ டிரெஸ்ஸிங் கலவை

● பொடியாக நறுக்கிய ஃப்ரெஷ் தில் / உலர்ந்த தில் – 1 டீஸ்பூன்

● மாவு டார்ட்டிலாக்கள் – 5 முதல் 8 அங்குலம்

● பொடியாக நறுக்கிய காய்கறிகள் (ப்ரோக்கோலி, காலிஃபிளவர், கேரட், குடைமிளகாய்) – 3 கப்

● துருவிய செடார் சீஸ் – 1 கப்

**எப்படித் தயாரிப்பது**



படி 1 : ஒரு கிண்ணத்தில் கிரீம் சீஸ், மயோனைஸ், டிரெஸ்ஸிங் மிக்ஸ்/மசாலா, காய்கறிகள் மற்றும் தில் ஆகியவற்றை ஒன்றாகக் கலக்கவும்.

படி 2 : சீஸ் கலவையைச் சமமாகப் பூசி, ஒவ்வொரு டார்ட்டில்லாவின் மீதும் ஸ்டஃபிங்கை வைக்கவும்.

படி 3 : டார்ட்டில்லாவை இறுக்கமாகச் சுருட்டி, ஒவ்வொரு டார்ட்டில்லாவையும் மென்மையாக மடிக்கவும்.

படி 4 : டார்ட்டில்லாவை பாதியாக வெட்டுவதற்கு முன், 2 மணி நேரம் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கலாம்.

படி 5 : இதோ! உங்கள் ராப் தயாராகிவிட்டது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**



# தேர்தல் நடைமுறைகளால் புளி வர்த்தகம் பாதிப்பு!

கிருஷ்ணகிரி, ஏப்.20

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி, அரசம்பட்டி, சந்தூர், வேலம்பட்டி, பாரூர், மத்தூர், தாதம்பட்டி, ஒலப்பட்டி, செல்லம் பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நெடுஞ்சாலை மற்றும் மேட்டு நிலங்களில் ஆயிரக்கணக்கான புளிய மரங்கள் உள்ளன. மண் வளம் புளி சாகுபடிக்கு கை கொடுத்து வருகிறது.

இப்பகுதியில் விளையும் புளி அதிக சதைப்பற்றுடன் சுவையாக இருப்பதால், சந்தைகளில் நல்ல வரவேற்பு உள்ளது. இப்பகுதியில் அறுவடை செய்யப்படும் புளியை தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கர்நாடகா, ஆந்திரா, பாண்டிசேரி மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள் நேரடியாக வந்து கொள்முதல் செய்கிறார்கள். கடந்தாண்டு புளி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், நடப்பாண்டு உற்பத்தி அதிகரித்துள்ளது.

போச்சம்பள்ளியில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை கூடும் சந்தையில் புளி டன் கணக்கில் குவிக்கப்படும். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதல், பறக்கும் படை கெடுபிடி காரணமாக, சந்தையில் புளி வர்த்தகம் படிப்படியாக குறைந்துள்ளது.

இதுகுறித்து புளி மொத்த வியாபாரிகள் கூறுகையில், 'தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், உரிய ஆவணங்கள் இல்லாமல் ரொக்கமாக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு சென்றால் பறிமுதல் செய்யப்படுகிறது. இதனால், சந்தைக்கு புளி வாங்க வரும் வெளி மாவட்ட வியாபாரிகள் வருகை குறைந்து விலை சரிந்துள்ளது. கடந்த மாதம் பூ புளி கிலோ ரூ.140 வரை விற்பனையானது. வரத்து குறைந்த நிலையில், நேற்று கூடிய போச்சம்பள்ளி சந்தையில் பூ புளி கிலோ ரூ.70க்கு விற்பனையானது. கொட்டை புளி கிலோ ரூ.40 முதல் ரூ.45 வரை விற்பனை செய்யப்பட்டது. இதனால் புளி விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். மேலும், சந்தைக்கு புளி வரத்து குறைந்தது. சுமார் 20 டன் மட்டுமே விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. தேர்தலுக்கு பின்னர் தான், போச்சம்பள்ளி சந்தையில் புளி வர்த்தகம் சீரடையும், என்றார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# 'மண்வளம் காக்க பசுந்தாள் உரமிடுவீர்!

விவசாயத்தில் நல்ல மகசூல் பெறுவதற்கு அடிப்படையானது மண் வளம், நீர் வளம், தரமான விதைகள் மற்றும் சரியான பருவம் ஆகியனவாகும். ஒரே வகை பயிர்களை தொடர்ந்து பயிடுவதால் மண்வளம் பாதிக்கப்படுகிறது. இதை தவிர்க்க பசுந்தாள் உரம் அல்லது பசுந்தழை உரம் பயிரிடலாம் என மதுரை விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி தெரிவிக்கிறார்.

பசுந்தழை உரமிடுவதால் மண் அமைப்பை மேம்படுத்துகிறது. நீர் பிடிப்பு திறனை அதிகரிக்கிறது. மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பை குறைக்கிறது. பயிர்கள் எதுவும் பயிரிடப்படாத பருவத்தில் வளர்க்கப்படும் பசுந்தழை பயிர்களால், களைச் செடிகளின் வளர்ச்சி குறைகிறது.

காரத்தன்மையுள்ள மண்ணைச் சீர்திருத்துவதற்கு உதவுகிறது. வேர் முடிச்சு நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துகிறது. பசுந்தாள் உரம் அல்லது பசுந்தழை உரம் (green manure) இயற்கை வேளாண்மையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பொதுவாக பயறு வகைப் பயிர்கள் இவ்வகையான பசுந்தாள் உரமாகப் பயன் படுத்தப்படுகின்றன. பயறுவகைப் பயிர்களின் வேர் முடிச்சுகளில் ரைசோபியம் பாக்டீரியா உள்ளதால் அவை வளிமண்டலத்தில் உள்ள நைட்ரஜன் போன்ற மூலப்பொருளை நில ஊட்டல் மூலம் மண்ணிற்கு வழங்குகிறது. எனவே, அவை நைட்ரஜன் செறிவான தாவரங்களாக இருக்கின்றன. செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் உண்டாகும். நீர், மண் மாசுபாடு இம்முறையால் தடுக்கப்படுகிறது.

கொழிஞ்சி, சணப்பை, எருக்கு, புங்கம், வேம்பு பூவரசு, தக்கைப்பூண்டு, அகத்தி, கொத்தவரை மற்றும் ஆடாதொடா ஆகியவை பொதுவாகப் பயன்படுத்தப்படும் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் ஆகும். இவற்றுள் கொழிஞ்சி, சணப்பை போன்ற செடிகள் வேளாண் நிலத்தில் பயிரிடப்பட்டு, அவை வளர்ந்து பூக்கும் முன்னரே அப்படியே உழுது நிலத்துடன் சேர்க்கப்படுகின்றன.

நிலத்தில் இந்த பருவத்தில் பசுந்தாள் உரம் இடுவது அடுத்த பருவத்தின் விளைச்சலில் நல்ல முன்னேற்றம் தரும்.

எனவே, விவசாயிகள், வேளாண் விதை உற்பத்தியாளர், வேளாண் விதை விற்பனையாளர் தங்களிடம் உள்ள பசுந்தாள் விதைகளை மதுரை, நாகமலை புதுக்கோட்டையில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- வீதம் செலுத்தி, விதையின் தரத்தை பரிசோதனை செய்து கொள்ளுமாறு விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலெட்சுமி தெரிவிக்கின்றனர்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்



# மாம்பழ சீசன் வந்தாச்சு! இரசாயனம் கலக்காத மாம்பழங்களை வாங்குவது எப்படி?



தமிழகத்தில் பொதுவாக மார்ச் 15 முதல் ஜுலை இறுதி வரை மாம்பழ சீசனாகும். முக்கனிகளை ஒரே நேரத்தில் உண்ணும் வாய்ப்பு இந்த காலத்தில் தான் கிடைக்கும். மா, பலா, வாழைகளில் அரசனாக திகழ்வது மாம்பழங் களாகும். மாதா ஊட்டாத சோற்றை மாம்பழம் ஊட்டும் என்பது பழமொழி. அத்தகைய பழங்களை ஒரு சில வியாபாரிகள் வணிக ரீதியாக லாபம் சம்பாதிக்கும் நோக்கில் இரசாயனங்களை பயன்படுத்தி பழங்களை பழக்க வைக்கிறார்கள். நாம் இயற்கையாக பழுத்த பழங்களையும், இரசாயன முறையில் பழுக்க வைக்கப்பட்ட பழங்களையும் எவ்வாறு கண்டிபிடிப்பது பற்றி இந்த பதிவில் பார்ப்போம்.

1) மாம்பழத்தின் காம்புப் பகுதியில் நுகர்ந்து பார்த்தால் நல்ல இனிமையான வாசனை வரவேண்டும். அப்படி வாசனையே இல்லை என்றால் அது இயற்கையாக பழுக்க வைக்கவில்லை என்று அர்த்தம்.

2) பழத்தை லேசாக அழுத்தி பார்த்தால் சற்றே மென்மையாக இருக்க வேண்டும். மிகவும் கல்லுப்போலவோ அல்லது சதசதப்பாகவோ இருக்கக்கூடாது.

3) மாம்பழத்தின் நிறத்தை வைத்து அதனுடைய சுவையை எடைபோட முடியாது. சில பழங்கள் வெளியே பச்சையாக இருந்தாலும்கூட உள்ளுக்குள்ளே பழுத்து தித்திப்பாக இருக்கும்.

4) கார்பைடு கல் வைத்துப் பழுக்க வைக்கப்பட்ட பழங்கள் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக, மஞ்சள்நிறத்தில் பளபளப்பாக இருக்கும். ஆனால் அவை உள்ளே சரியாக பழுக்காமல் கடும் புளிப்பு சுவையுடன் இருக்கும்.

5) பழத்தின் தோலில் லேசான சுருக்கங்கள் இருந்தால் அது இயற்கையாகவே பழுத்தது என்பதை உறுதி செய்யலாம். ஆனால் மிகவும் சுருங்கி போய் இருந்தால் அது விரைவாக அழுக தொடங்கும் பழைய பழங்களாகும் (OLD STOCK).

6) மாம்பழத்தின் காம்பு பகுதியில் லேசான பிசின் கசிந்து காய்ந்து போயிருக்கிறதா? எனப்பாருங்க. அப்படி இருந்தால் அது மரத்திலேயே இயற்கையில் முற்றி பழுத்த பழமாகும்.

7) நல்ல சதைப்பற்றுள்ள மாம்பழங்கள் கையில் தூக்கி பார்க்கும் போது சற்று கனமாக இருக்கும். இப்படிப்பட்ட பழங்கள் அதிக சுவையுடன் இருக்கும்.

8) மாம்பழங்களை வாங்கும் போது தட்டையாக இல்லாமல் உருண்டையான வடிவத்தில் உள்ள மாம்பழங்களை வாங்குங்கள். அது தான் நன்கு முற்றிய மற்றும் சதைப் பற்றுள்ள பழமாக இருக்கும்.

9) பழத்தில் ஆங்காங்கே சிறிய கரும்புள்ளிகள் இருப்பது முற்றிலும் இயற்கையான ஒன்று தான். ஆனால் பெரிய அளவில் கருப்பு தழும்புகள் இருந்தால் பழங்கள் வீணாகி போய்விடும்.

10) கோடையில் எந்த மாதத்தில் எந்த ரக மாம்பழ சீசன் வருகிறதோ அதை மட்டும் பார்த்து வாங்குகள். எடுத்துக் காட்டாக முதலில் நாட்டு மாம்பழங்கள் மல்கோவா, இமாம் பசந்த் வரும். ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அல்போன்சா, பங்கனப்பள்ளி, செந்தூரா, கேசர் போன்ற ரகங்கள் வரும். கடைசியாக நீலம், தாசரி ரகங்களும் வரும்.

எனவே நமக்கு தேவையான பழங்களை உள்ளூர் வியாபாரி களிடத்தில் நேரடியாக வாங்கி இந்த மாம்பழ சீசனை கொண் டாடுவோம். FSSAI பழங்களை (மா, வாழை, பப்பாளி) போன்ற பழங்களை கால்சியம் கார்பைடு மூலமாக பழுக்க வைக்கக் கூடாது என அனைத்து மாநிலங்களுக்கு அறிவுரை வழங்க பட்டுள்ளது குறிப்பிட்டதக்கது.

அதைமீறி அவசரமாக அவசரமாக பழங்களை பழுக்க வைப்பதன் விளைவாக அதை பயன்படுத்துவது சட்ட படி குற்றமாகும். எனவே தரமான நல்ல பழங்களை வாங்கிட தயாரா? நீங்க.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மீன் விலை கடும் அதிகரிப்பு

திருப்பூர், ஏப்.20

திருப்பூர் பல்லடம் ரோடு தென்னம்பாளையம் பகுதியில் மீன் மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இந்த மீன் மார்க்கெட்டில் திருப்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் வந்து தங்களுக்கு தேவையான மீன்களை வாங்கி செல்வார்கள். மீன் மார்க்கெட்டில் மற்ற நாட்களைவிட ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டம் அதிகரித்து காணப்படும். இந்நிலையில் மீன் இனப்பெருக்க காலம் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மீன் மார்க்கெட்டிற்கு கடல் மீன்கள் வரத்து குறைவாகவே காணப்பட்டது. இதனால் அணைப்பகுதி மீன்களான பாறை, நெய் மீன், கட்லா, ரோகு உள்ளிட்ட மீன்களின் விற்பனை அதிகரித்து காணப்பட்டது. கடல் மீன்களின் வரத்து குறைந்ததால் மீன்களின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. நேற்று முன்தினம் நிலவரப்படி கிலோவுக்கு வஞ்சிரம் ரூ.980, விளமீன் ரூ.500, கடல் பாறை ரூ.600, ஊழி ரூ.380, சங்கரா மீன் ரூ.350, இறால் ரூ.450, நெத்திலி ரூ.220 ஆகிய விலைக்கு விற்பனையானது.




Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

விதை உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விவசாய பெருமக்களுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதை பரிசோதனை செய்யப் படுகிறது. ஒரு விதை குவியலின் புறத்தூய்மை, முளைப்புத் திறன், பிறஇரக கலப்பு, ஈரப்பதம் ஆகியவற்றை உறுதி செய்யும் விதமாக விதைப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

### புறத்தூய்மை பரிசோதனை

பயிர் அறுவடை முடிந்து, கதிரடித்து, பிரிக்கப்பட்டு எடுக்கப்படும் விதைக்குவியல்களிலிருந்து கிடைக்கும் விதைகள் உடனடியாக விதைப்பதற்கோ நடவு செய்வதற்கோ தகுதியானதாக இருக்காது. அந்த விதைகளுடன் மண், சிறு கற்கள், இலைகளின் துகள்கள், குச்சிமற்றும் பொக்கு விதைகள் கலந்து இருக்கும். எனவே அறுவடை முடிந்து பிரித்தெடுக்கப்படும் விதைகள் சுத்தமாகவும் பிற பொருட்கள் கலப்பு இன்றி இருக்கவும் சுத்தி செய்யப்பட வேண்டும். புறத்தூய்மை பரிசோதனை இதனை உறுதி செய்ய மேற்கொள்ளப்படுகிறது. புறத்தூய்மை பரிசோதனையின் போது தூய விதைகளுடன்களை விதைகள், பிற பயிர் விதைகள் மற்றும் பிற பொருட்கள் கலந்துள்ளனவா எனக் கண்டறியப்படுகிறது.

### முளைப்புத் திறன் பரிசோதனை

முளைப்புத் திறன் என்பது விதையானது உயிரும் வீரியமும் கொண்டு, கருமுளை விட்டு பின்னர் வளர்ச்சிக்கு அத்தியாவசிய மான பாகங்கள் உருவாகி இயல்பான செடியாவதற்குறிய திறனே ஆகும். முளைப்புத் திறன் பரிசோதனை தூய விதைகளில் இருந்து மேற்கொள்ள வேண்டும்.

முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொள்ள மணல், முளைப்பு தாள்கள் மற்றும் வடிதாள்கள் பயன்படுத்தப்படு கின்றது. குறைந்தபட்சம் 400 விதைகளில் முளைப்புத்திறன் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. முளைப்புத்திறன் பரி சோதனையின் போது நாற்றுகளை இயல்பானது, இயல்பற்றது எனவும், முளைக்காத விதைகளை உயிரற்றது, கடினமானது

& உயிருள்ள முளைக்காத விதைகள் எனவும் வகைபடுத்தி முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

**பிறஇரக கலப்பு பரிசோதனை**

விதை மாதிரிகளில் பிறஇரக விதைகள் கலந்துள்ளனவா என்பதை நுண்ணோக்கி மூலம் கண்காணித்து இரகத்தின் குணநலன்களைக் கருத்தில் கொண்டு பிரித்தரியப்படுகிறது.

வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்படும் வல்லுநர் விதைகளை ஒப்பீட்டு மாதிரிகளாக கொண்டு பிறரக கலப்பு பரிசோதனை செய்யப்படுகிறது.

**ஈரப்பதம் பரிசோதனை**

விதையின் ஈரப்பதம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கக் கூடாது. சரியான ஈரப்பத நிலையில் உள்ள விதைகள் பூச்சி மற்றும் பூஞ்சான தாக்குதல் இன்றி சேமித்து வைக்ககூடிய நிலையில் இருக்கும். ஒவ்வொரு குறிப்பிட்ட பயிரின் விதைக்கும் சரியான ஈரப்பதம் உள்ளதா என ஈரப்பதம் கண்டறியும் கருவியை கொண்டு ஈரப்பத பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது. விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் அனைவரும் தங்களிடமிருக்கும் விதைகள் தரமானதா என்பதை அறிய விதை பரிசோதனை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விதை பரிசோதனை செய்ய விதை மாதிரியுடன், விதை பரிசோதனை கட்டணம் ரூ.80 செலுத்த வேண்டும். விதை மாதிரி உடன் பயிர், ரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை, அனுப்புநர் பெயர், முகவரி & தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விதை மாதிரியினை கொடுத்து பயன்பெறுமாறு திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர் ஞா.ஆனந்தி ராதிகா கேட்டுக் கொள் கிறார். விதை மாதரி அனுப்ப வேண்டிய முகவரி : விதைப் பரிசோதனை ஆய்வகம், நிருபர் காலனி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627 002.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் முழு வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வுப் பேரணி



கோயம்புத்தூர், ஏப்.20

நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் 100 சதவீதம் வாக்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில், கோயம் புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் சனிக்கிழமையன்று வாக்காளர் விழிப்புணர்வுப் பேரணி தொடங்கப்பட்டது. மாணவர் நல மையத்தின் முதன் மையர் முனைவர் ஜெ.இராமலிங்கம், பேரணியை கொடிய சைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா.வெற்றிவேல் காளை, நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் கே.சிவக்குமார், முனைவர் கே.சந்திரகுமார், முனைவர் பி.மாலதி, தன்னார்வலர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் போது, ஜெ.இராமலிங்கம், முதல்முறையாக வாக்களிக்கவுள்ள மாணவர்களிடையே உரையாற்றினார். வாக்களிப்பது ஒவ்வொரு குடிமகனின் அடிப்பை டஉரிமை என்றும், ஒரு ஜனநாயகச் சமூகத்தின் வளர்ச்சிக்கு அது இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விழிப்புணர்வுப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் பதாகைகள், தட்டிகள் மற்றும் பேனர்களை ஏந்திச்சென்று, வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 100% வாக்குப்பதிவு, வருங்காலத்திற்காக வாக்களிப்போம்,

சிறந்த இந்தியாவிற்கா கவாக்களிப்போம், உங்கள் வாக்கு, உங்கள் குரல் போன்ற முழக்கங்கள் மாணவர்களால் முழங்கப்பட்டன. பேரணி ஊர்வலம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாணவர் விடுதிகள், ஊழியர் குடியிருப்புகள் மற்றும் பல்வேறு துறைகள் வழியாக நடைபெற்றது.

இதன் மூலம், அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்ற செய்தியைப் பொது மக்களிடையே திறம்படப் பரப்பியது.

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், உயிரித் தொழில்நுட்பம், வேளாண் வணிக மேம்பாடு மற்றும் உயிரித் தகவலியல் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த 1000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த விழிப்புணர்வுப் நடைபயணப் பேரணியில் கலந்து கொண்டனர். ஒரு ஜனநாயக நாட்டை வளர்த்தெடுப்பதில் தங்களுக்குள்ள உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அவர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.




# பூச்சிகளைப் கட்டுப்படுத்துவதில் இனக்கவர்ச்சி பொறிகளின் பங்கு

பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் இனக்கவர்ச்சி பொறிகள் மிக முக்கியமான இயற்கை முறையாக விளங்குகின்றன. இவை ரசாயன மருந்துகளுக்கு மாற்றாகப் பயன்படுத்தப் படுகின்றன.



## இனக்கவர்ச்சி பொறிகளின் அடிப்படைத் தத்துவம்

● இனக்கவர்ச்சி பொறிகள் பூச்சிகளின் இயற்கை இனப் பெருக்க நடத்தைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டவை. பெண் பூச்சிகள் சுரக்கும் ஃபெரோமோன் எனும் வாசனைப் பொருளைப் பயன்படுத்தி ஆண் பூச்சிகளைக் கவர்ந்து இழுக்கின்றன. இதன் மூலம் பூச்சிகளின்இனப்பெருக்கம் தடுக்கப்படுகிறது.

● இந்தப் பொறிகள் பெண் பூச்சியின் வாசனையைத் தழுவி செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட லெமினேன் அல்லது ஜெல் வடிவிலுள்ள ஃபெரோமோன்களைப் பயன்படுத்துகின்றன. ஆண் பூச்சிகள் இந்த வாசனைக்கு ஈர்க்கப்பட்டு பொறியில் விழுவதன் மூலம் அழிக்கப்படுகின்றன அல்லது சேகரிக்கப்படு கின்றன.

● ஒரு ஆண் பூச்சி அழிக்கப்படும் போது, 200-300 புழுக்கள் உற்பத்திதடுக்கப்படுகிறது. இது பயிர்ச் சேதத்தைக் குறைக்கும் சிறந்த முறை.

## பூச்சிக்கட்டுப்பாட்டில் பங்கு

● பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், தாக்குதலை முன்னறிவதற்கும் இனக்கவர்ச்சி பொறிகள் உதவுகின்றன.



தினமும் 2-5 பூச்சிகள் ஒரு பொறியில் விழுவதன் மூலம் பூச்சி அளவைக் கணிக்கலாம்.

● இவை குறிப்பாக காய்கறி, பந்தல் பயிர்கள், நெல், பயறு வகைகளைத் தாக்கும் பூச்சிகளான அமெரிக்கன் காய்ப்புழு, தக்காளி பழ துளைப்பான், தண்டு துளைப்பான் போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. ரசாயன மருந்துகளை விட இது சூழலை மாசுபடுத்தாது.

● பெண் பூச்சிகள் ஆணுடன் சேராமல் கருவுறா முட்டைகள் இடுவதால் புழு உற்பத்தி நின்று விடுகிறது. இதனால் பயிர் மேலாண்மை செலவு குறையும்.

**பொறிகளின் வகைகள்**

● புனல் வடிவ இனக்கவர்ச்சி பொறி காய்கறி புழுக்களைக் கட்டுப்படுத்த பயன்படுகிறது. இது ஆண் பூச்சிகளை கவர்ந்து பாலிதீன் பையில் சேகரிக்கிறது.

● விளக்குப் பொறிகள், மஞ்சள் ஒட்டும் அட்டைப் பொறிகள் ஆகியவை இனக்கவர்ச்சியுடன் இணைந்து பயன்படுத்தப் படலாம். ஃபெரோமோன் சிமிழ்கள் 30-40 மீட்டர் இடைவெளியில் வைக்கப்படுகின்றன.

● ஒரு ஏக்கருக்கு 5-12 பொறிகள் போதும். கண்காணிப்புக்கு 2 பொறிகள் சுமார்.

**நன்மைகள் மற்றும் பயன்பாடு**

● சுற்றுச்சூழல் மாசு இல்லை, நன்மை செய்யும் பூச்சிகளுக்கு பாதிப்பில்லை, எதிர்ப்புத் தன்மை உருவாகாது. காய்கறிகளுக்கு பூச்சிக்கொல்லிகள் தேவையில்லை.

● இவற்றை வயலில் ஆங்காங்கே 1-1.5 மீட்டர் உயரத்தில் வைக்கவும். ஃபெரோமோன் மாற்ற 4-6 வாரங்களுக்கு ஒரு முறை.

● தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள்

இவற்றைப் பரிந்துரைக்கின்றன. உடுமலை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பயன்பாட்டு முறைகள்**

● பயிர் தொடங்கும் முன் பொறிகளை வைக்கவும். தினசரி பூச்சிகளை எண்ணி பதிவு செய்யவும். தாக்குதல் அதிகமானால் இயற்கை மருந்துகளுடன் இணைக்கவும்.

தகவல் : ***முனிசா.மா, மதுரஞ்சனா.ஜெ,பசுபதி.இ, கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை – 625 532.***

# காய்கறிகள் ரூ.20 லட்சத்திற்கு விற்பனை

நாமக்கல், ஏப்.20

நாமக்கல் கோட்டை மெயின்ரோட்டில், உழவர் சந்தை செயல்பட்டு வருகிறது. இப்பகுதியில் உள்ள விவசாயிகள், காய்கறிகள் மற்றும் பழங்களை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

வழக்கமாக, வார விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், அதிகமான பொதுமக்கள் உழவர் சந்தைக்கு வந்து தங்களுக்கு தேவையான காய்கறி மற்றும் பழங்களை வாங்கி செல்வது வழக்கம். நேற்று முன்தினம் உழவர் சந்தையில், விறுவிறுப்பாக வியாபாரம் நடைபெற்றது.

182 விவசாயிகள் உழவர் சந்தைக்கு காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 42,915 கிலோ காய்கறிகள், 9,690 கிலோ பழங்கள் மற்றும் 30 கிலோ பூக்கள் என 52,635 கிலோ எடையுள்ள விளைபொருட்கள் உழவர் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப் பட்டன. மொத்தம் 10,527 பொதுமக்கள் உழவர் சந்தையில், காய்கறி, பழங்களை வாங்கிச் சென்றனர். நேற்று முன்தினம் ஒரே நாளில் விற்பனையான காய்கறி மற்றும் பழங்களின் மொத்த மதிப்பு ரூ.19 லட்சத்து, 99 ஆயிரத்து 940 என உழவர் சந்தை நிர்வாக அலுவலர் தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# எலுமிச்சை கிலோ ரூ.216 ஆக உயர்வு!



தர்மபுரி, ஏப்.20

தர்மபுரி மாவட்டத்தில் எலுமிச்சை விலை ரூ.216 ஆக உயர்ந்தது. தர்மபுரி மாவட்டத்தில், 102 டிகிரி பாரன்ஹீட் என்ற அளவில் வெப்பம் வீசி வருகிறது. இதனால், பொதுமக்கள் நிழலை தேடி சென்று, தங்களை குளிர்வித்து வருகின்றனர். மேலும் பலர், இயற்கை பழரசங்களை பருகி தங்களை குளிர்வித்து வருகின்றனர். இந்நிலையில், கோடைக்கு குளிர்ச்சியை தரும் எலுமிச்சை பழத்தின் விலை உயர்ந்துள்ளது. கடந்த பிப்ரவரி மாதத்தில், ஒரு கிலோ எலுமிச்சை பழம் ரூ.80க்கு விற்பனையானது. கோடை துவங்கிய நிலையில், அதன் விலை கணிசமாக உயர்ந்து கடந்த மாதம் உழவர் சந்தையில் ரூ.170 என விற்பனையானது. நேற்று முன்தினம் உழவர் சந்தையில் ஒரு கிலோ ரூ.216க்கு விற்பனையானது.

தொடர்ந்து விலை உயர்ந்து வருவதால் எலுமிச்சை சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# பலாப்பழம் வரத்து அதிகரிப்பு

தர்மபுரி, ஏப்.20

கேரளாவில் இருந்து தர்மபுரிக்கு பலாப்பழம் விற்பனைக்கு வருவது அதிகரித்துள்ளது. வியாபாரிகள் பலாப்பழத்தை கிலோ ரூ.160க்கு விற்பனை செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் கடலூர், திண்டிவனம் மாவட்டங்களிலும், தர்மபுரியில் வத்தல் மலையிலும், கேரள மாநிலத்திலும் பலாப்பழம் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. கடலூர், திண்டிவனம் பகுதியில் விளையும் பலா சீசன் முடிந்ததை அடுத்து, கேரள பலாப்பழம் தர்மபுரி சந்தைக்கு வரத்து அதிகரித்துள்ளது. தர்மபுரி மார்க்கெட்டில் கேரளா பலாப்பழம் ஒரு கிலோ ரூ.200க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது வரத்து அதிகரிப்பால் ஒரு கிலோ பலாப்பழம் ரூ.160க்கு விற்பனையாகிறது. இதுபற்றி வியாபாரிகள் கூறுகையில், 'தற்போது பலாப்பழம் சீசன் துவங்கியுள்ளது.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைகளை பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

விதைகளை பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும் என கடலூர், விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.விஜயா வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு :

**கோடை உழவு :** கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணின் மேல் அடுக்கு உடைந்து மண்ணின் நாள்பட்ட இறுக்கம் தளர்த்தப்பட்டு மண்ணின் ஊடுருவல் திறன் மற்றும் தன்மை அதிகரிக்கிறது. மேலும் மழை காலத்தில் பெய்யும் மழைநீர் வடிந்து வீணாகாமல் மண்ணுக்குள் செல்வதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்கிறது மண்ணின் காற்றோட்ட தன்மையும் அதிகரிக்கிறது. மண்ணின் மூலம் பரவும் பூச்சி, முட்டை, புழு மற்றும் கூட்டு புழுக்கள் அழிக்கப்படுகின்றது.

**விதைப் பரிசோதனை :** விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்ய வாங்கும் விதை களையோ அல்லது தங்களது கைவசம் உள்ள விதைகளையோ விதைப்பதற்கு முன் முளைப்புத்திறன் அறி வதன் மூலம் நல்ல மகசூல் மற்றும் நல்ல வருவாய் கிடைக்கும். விவசாயிகளுக்கும், விதை உற்பத்தியாளர் களுக்கும், விதை விற்பனையாளர் களுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதைப்பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் 97,பிருந்தாவன் நகர், பெண்ணை கார்டன், 50 அடி ரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணாமலை செட்டிசாவடி, கடலூர் - 607 006 என்ற முகவரியில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறையின் கட்டுப் பாட்டின் கீழ் விதைப்பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. விதை மாதிரிகளை பரிசோதனை செய்ய ரூ.80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி பயிர், ரகம் மற்றும் குவியல் எண் ஆகி யவை குறித்த விபரசீட்டுடன் நெல் விதை 50 கிராம், உளுந்து 100 கிராம், எள், ராகி 25 கிராம், தக்கைப்பூண்டு 50 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், தக்காளி, கத்திரி, மிளகாய் 10 கிராம் பாகல், புடலங்காய் 250 கிராம் அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்தை மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் தரத்தை அறிந்து தரமான விதைகளை பயன்படுத்துவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிருஷ்ணகிரியில் ரூ.9.21 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

கிருஷ்ணகிரி, ஏப்.20

கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று முன்தினம் இ-நாம் முறையில் மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், 34 விவசாயிகள் 156 மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்து குவித்தனர். விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் ரூ.14,391க்கும், குறைந்தபட்ச ரூ.13,709க்கும், உருண்டை ரகம் அதிகபட்சம் ரூ.12,699க்கும், குறைந்தபட்ச ரூ.11,491க்கும், பனங்காலி ரூ.32,023க்கும் விற்பனையானது. ஆக மொத்தம் 8,280 கிலோ மஞ்சள் ரூ.9.21 லட்சம் ஏலம் போனது. விற்பனை செய்த தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் கூறுகையில், கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், விவசாயிகள் தங்கள் விளைபொருளை கிடங்கில் இருப்பு வைத்து சந்தை மதிப்பில் 50 முதல் 75 சதவீதம் வரை, ஆண்டுக்கு 5 சதவீதம் வட்டியில் பொருளீட்டு கடன் பெற்று கொள்ளலாம். உரிய விலை கிடைக்கும்போது விற்பனை செய்யும் வசதியும் உள்ளது, என்றார்.

# முதுமலையில் கோடை மழை

## சாலையோர புல்வெளிகளில் புள்ளி மான் கூட்டம்

ஊட்டி, ஏப்.20

முதுமலை வனப்பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த லேசான கோடை மழையால் வனப்பகுதி மற்றும் சாலை ஓரத்தில் உள்ள புல்வெளிகளில் மான் கூட்டங்களின் மேய்ச்சல் அதிகரித்துள்ளது. கோடை வெயில் சுட்டெரித்து வரும் நிலையில் வனப்பகுதிகளில் வறட்சி அதிகரித்து வருகிறது. நீர் ஆதாரங்கள் குறைந்து காணப்படுகின்றன.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

முதுமலை வனப்பகுதியில் வனவிலங்குகளின் தாகம் தீர்க்க காமராஜர் அணையில் இருந்து மாயார் ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் முதுமலை வனப்பகுதிகளில் லேசான கோடை மழை பெய்துள்ளது. இந்த மழையால் புல்வெளிகளில் பசுமை படர்ந்துள்ளது. இதில் சாலை ஓர புல்வெளிகளில் மான் கூட்டங்கள் மேய்ச்சலில் ஈடுபட்டு வருகின்றன. இந்த சாலை வழியாக வாகனங்களில் செல்வோர் மற்றும் சுற்றுலாப்பயணிகள் சாலை ஓரங்களில் மேயும் வன விலங்குகளை பார்த்து ரசித்து வருகின்றனர்.

